செ.வெ.எண்: 140 நாள்: 03.03.2021

**மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயிற்சிக்காக அனுப்பி வைப்பு.**

தஞ்சாவூர் கோட்டாட்சியர் அலுவலக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாப்பு அறையிலிருந்து மாவட்டத்தில் அலுவலர்கள், பொதுமக்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை இன்று (03.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் வழங்கினார்.

தஞ்சாவூர் கோட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள வைப்பறையிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் முன்னிலையில் வாக்கு பதிவு இயந்திரங்களை அனுப்பி வைத்த பின் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம கோவிந்த ராவ் இ.ஆ.ப. செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

மாவட்டத்திலுள்ள 8 தொகுதிகளிலும் மண்டல அலுவலர்கள், வாக்குசாவடி நிலை அலுவலர்கள், தொடர்பு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பயிற்சி அளிப்பதற்காக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.பொதுமக்களில் யாருக்காவது மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்ற சந்தேகம் இருந்தால், தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்தை அணுகலாம். அவர்களுக்குச் செயல் விளக்கம் அளிப்பதற்காக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் உள்ளது. இதேபோல, பல்வேறு பயிற்சிகளில் கலந்து கொள்கிற அனைத்து அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.மாவட்டத்தில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் போதுமான அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாற்று இயந்திரங்களும் இருப்பில் உள்ளன. மாவட்டத்தில் சரிபார்ப்பு முடிந்த பிறகு நல்ல நிலையில் 4,986 வாக்குப் பதிவு இயந்திரங்களும், 3,592 கட்டுப்பாட்டுக் கருவிகளும், 3,922 ஒப்புகைச் சீட்டு இயந்திரங்களும் உள்ளன. இவற்றில் 5 சதவீத இயந்திரங்கள் பயிற்சிக்காக அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, அனைத்து தொகுதிகளிலுள்ள தலைவர்களின் உருவங்கள் 90 சதவீதம் மறைக்கப்பட்டுள்ளன. ஏதாவது புகார்கள் வந்தால், அதை உடனடியாகக் கள அலுவலர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டத்தில் 102 பதற்றமான வாக்கு சாவடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் வெப் கேமிரா மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படும். இந்த வாக்கு சாவடிகளில் நிறைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த வாக்கு சாவடிகளில் மீண்டும் பிரச்னை வராத அளவுக்குத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் எடுத்து வருகிறது.

மாவட்டத்துக்குத் தேர்தல் செலவின பார்வையாளர்கள் இனிமேல் வருவர். மேலும், மாவட்ட நிர்வாகம் சார்பில் வருமான வரித் துறையுடன் இணைந்து கண்காணித்து வருகிறோம். எங்கேயாவது சந்தேகப்படும்படியாகவும், பெரிய அளவிலும் பண பரிவர்த்தனை நடந்தால், மாவட்ட ஆட்சியரகத்திலுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை இலவசத் தொலைபேசி எண் 1950க்கு தகவல் அளிக்கலாம். தவிர, ஒவ்வொரு தொகுதியிலும் உதவி செலவின பார்வையாளர்கள்

நியமிக்கப்பட்டுள்ளனர். ஏதாவது குறிப்பிடும்படியான புகார்களைத் தெரிவித்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்தில் பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் ரூ. 8.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்..

தொடர்ந்து, தஞ்சாவூர், திருவையாறு, ஒரத்தநாடு ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெற கூடிய குந்தவை நாச்சியார் பெண்கள் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் . தேவையான அடிப்படை வசதிகள் உள்ளதா என ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து குந்தவை நாச்சியார் கல்லூரியில் உள்ள வாக்குப்பதிவு மையங்களையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் திருமதி உமா மகேஸ்வரி, தஞ்சாவூர் கோட்டாட்சியர /தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி. வேலுமணி, திருவிடைமருதூர் தேர்தல் நடத்தும் அலுவலர் திரு கமலகண்ணன், ஒரத்தநாடு தேர்தல் நடத்தும் அலுவலர் திரு பழனிவேல், திருவையாறு தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி மஞ்சுளா, வாக்குப்பதிவு இயந்திரம் மேலாண்மை அலுவலர் திரு சுப்பையா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**